## இஸ்கானின் அதிகார அமைப்பினை புரிந்து கொள்ளுதல்

### தலைப்பின் வரலாறு:

சில வருடங்களுக்கு முன் இஸ்கானின் வருங்காலத்திற்கென ஒரு திட்டவட்டமான ஒழுங்குமுறையை வகுப்பதற்கு ஜி.பி.சி துவங்கியது. இஸ்கானின் முக்கியமாக பிரச்சினைகளை தேர்ந்தெடுத்து அவற்றை விவாதிப்பதற்கு குழுக்களை அமைத்தார்கள். இஸ்கானிற்குள் இருக்கும் வெவ்வேறு அதிகார வர்க்கத்தைப் பற்றி படிப்பதற்கு ஒரு குழுவினரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், பல்வேறு அதிகார வர்க்கத்தினரிடையே இருக்கும் முரண்பாடுகளை சரி செய்வதற்கு ஒரு வழிமுறையை பரிந்துரை செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்குழுவில் தவத்திரு. பானுஸ்வாமி, குருபிரசாத் ஸ்வாமி, ப்ரஹ்லாதானந்த ஸ்வாமி, ரமாஸ் ஸ்வாமி, சிவராம ஸ்வாமி, பத்ரி நாராயண தாஸ், மற்றும் பின்னர் சேர்க்கப்பட்ட நிரஞ்சன் ஸ்வாமி ஆகியோர் உறுப்பினர்கள்.

### இக்கட்டுரையின் மையம்

ஆகையால் இக்கட்டுரையில் தீக்ஷா மற்றும் சிக்ஷா குருமார்கள், அவர்களின் சிஷ்யர்கள், மண்டல ஜி.பி.சி. உறுப்பினர்கள், நிர்வாக பகுதி செயலாளர்கள். கோவில் தலைவர்கள், மற்றும் இஸ்கானால் அங்கீகரிக்கப்பட்ட மேலாளர்கள் ஆகியோரால் பின்பற்றப்பட வேண்டிய குறிக்கோள்களை வரையறுப்பதில் பிரத்யேக கவனம் செலுத்தப்பட்டது. இதன் குறிக்கோள் ஆன்மீக குருமார்கள் மற்றும் மேலாளர்கள் இடையே ஏற்படும் கருத்து வேறுபாட்டை தவிர்ப்பது அவர்கள் இருவரின் பராமரிப்பின் கீழ் இருக்கும் பக்தர்களின் மீது இக்கருத்துவேறுபாடுகளின் தாக்கம் ஏற்படுவதை குறைப்பது ஆகியனவாகும்.

### ஆன்மீக குரு என்றால் தீக்ஷா மற்றும் சிக்ஷா அல்லது இரண்டும்

இப்பொழுதிலிருந்து எங்கெல்லாம் நாம் ஆன்மீக குரு என்று குறிப்பிட்டாலும் தீக்ஷா அளிக்கும் குரு, ஆன்மீக கட்டளைகளை வழங்கும் குரு (இதுபோல் செயல்படும் மேலாளர்களையும் உள்ளடக்கியது) ஆகிய இருவரையும் குறிப்பிடும் என்பதை குறித்துக் கொள்ளவும். மேலும், எப்போதெல்லாம் நாம் ஆன்மீக அதிகாரிகள் என்று குறிப்பிடுகிறோமோ அப்பொழுது அது ஆன்மீக குரு அல்லது மேலாளர் யாரேனும் ஒருவரை குறிப்பிடுவதாகும். இவர்களின் கட்டளைகள் மற்றும் உதாரணங்ளே ஒரு பக்தர் பக்திசேவையில் மீது நம்பிக்கை கொள்ள அடித்தளம் ஏற்படுத்தி மேலும் அப்பக்தரின் நம்பிக்கையை தொடர்ந்து வளர்க்கிறது.

### இஸ்கானில் உள்ள அதிகாரி

இக்கட்டுரையானது இஸ்கானின் நிர்வாக அமைப்பை பற்றிய விரிவான அல்லது உறுதியான ஆய்வோ அல்லது குரு தத்துவத்தைப் பற்றிய விரிவான ஆய்வோ அல்ல. குருவாவதற்கு தேவையான குணங்கள் மற்றும் அவர்களின் கடமைகள் மற்றும் ஆன்மீக குருவை தேர்ந்தெடுக்கும் முறை பற்றிய ஆய்வல்ல.

### இக்கட்டுரையின் அடிப்படை கூற்று பின்வருமாறு:

ஒரு பக்தர் தீக்ஷா குரு, சிக்ஷா குரு, சந்நியாசி, ஜி.பி.சி., நிர்வாக செயலாளர், மண்டல செயலாளர், கோவில் தலைவர், மன்றத் தலைவர் அல்லது இஸ்கானில் அதிகாரி என்ற ஸ்தானத்தில் இருப்பவர் போன்ற மேற்கண்ட எந்தவொரு ஸ்தானத்தில் இருப்பினும் அவர் முழு ஜி.பி.சி. யின் அதிகாரத்திற்கு கீழ் ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளைகளை பின்பற்றி இஸ்கானிற்கு சேவை செய்யும் பொழுதே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் முழுமை பெறுகிறது.

இந்த கூற்றை நிரூபிக்க, ஸ்ரீல பிரபுபாதர் தொடர்ச்சியாகவும் தெளிவாகவும் தன்னுடைய போதனைகள் மட்டுமின்றி தானே கையெழுத்திட்ட அதிகாரபூர்வமான ஆவணங்களிலும் இக்கோட்பாட்டை நிறுவியுள்ளார் என நாம் வலியுறுத்துவதை தவிர வேறெதுவும் செய்ய அவசியமில்லை என உணர்கிறோம். இவ்வாறு ஸ்ரீல பிரபுபாதர் மொத்த ஜி.பி.சி.யை இறுதியான நிர்வாக ஆணையம் என தெளிவாக நிறுவியுள்ளார். மேலும், தேவைப்படும் பொழுது ஆன்மீக குருவாக சேவை செய்யும் பக்தர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த இஸ்கானிற்குமான ஆன்மீக வழிகாட்டுதல் என்பது மொத்த ஜி.பி.சி.யின் வரம்பிற்குட்பட்டது.

**பத்திரிகையாளர்:** உங்களுக்கு பிறகு யாரேனும் இந்த இயக்கத்தின் பிரதான ஆச்சாரியராக நியமித்துள்ளீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** "நான் சிலருக்கு பயிற்சி அளிக்கின்றேன் அதாவது முன்னேறிய மாணவர்களுக்கு(நான் எனது மூத்த மாணவர்களுக்கு சில பயிற்சி அளிக்கின்றேன்.) அவர்கள் எளிமையாக பொறுப்பினை ஏற்றுக்கொள்வர். நான் அவர்களை ஜி.பி.சி. ஆக நியமித்துள்ளேன்." வேறுவிதமாக கூறினால், மொத்த ஜி.பி.சி.யும் இறுதி நிர்வாக ஆணையமாக இருப்பினும் அதன் கடமை நிர்வாகம் செய்வது மட்டுமின்றி கற்பிப்பதும் ஆகும்.

**இரு நிர்வாக அமைப்பு**

ஒவ்வொரு பக்தரும் தனது ஆன்மீக ஊக்கத்தை உயர் அதிகாரிகளிடம் இருந்து ஏற்றுக் கொள்வதால் இஸ்கானிற்குள் இரண்டு நிர்வாக அமைப்பு மற்றும் அதன் பிரதிநிதிகளுடன் இருக்கின்றது. ஒன்று பிரதானமாக ஆன்மீகம் பற்றியது மற்றொன்று பிரதானமாக நிர்வாகம் பற்றியது. இரு நிர்வாகிகளும் தங்களது தனிப்பட்ட அதே சமயத்தில் ஒன்றையொன்று சார்ந்த நோக்கங்களுக்காக ஸ்தாபக ஸ்தாபக ஆச்சாரியரின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து சேவை செய்கிறார்கள். இருவருமே மொத்த ஜி.பி.சி.யால் தங்களது பராமரிப்பில் பக்தர்களுக்கு அடைக்கலம் வழங்க ஜி.பி.சி.யால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.
இந்த அடைக்கலம் உதாரணம் மூலமாகவோ கட்டளைகள் மூலமாகவோ கொடுக்கப்படுகிறது.

இந்த இரு அமைப்மையும் ஆன்மிகம் மற்றும் நிர்வாகம் என வேறுபடுத்துவதினால் நிர்வாக அதிகாரி ஆன்மீக அதிகாரிக்கு முரணானவர் என்றோ அல்லது ஆன்மீக அதிகார அமைப்பு சிறப்புரிமை பெற்றது என்றோ இயல்பாகவே தூய்மையானதென்றோ பரிந்துரைக்கவில்லை.

நிர்வாகமும் ஆன்மீக செயல்பாடே... இரு கிருஷ்ணருடைய ஸ்தாபகம், நம்முடைய பிரச்சார அலுவல்களில்... நாம் நிறைய பணம், சொத்துக்கள் மற்றும் அதிகஅளவிலான புத்தகங்கள் வாங்குவது விற்பது போன்றவற்றை கையாளுகிறோம். ஆனால் இத்தகைய செயல்பாடுகள் கிருஷ்ண பக்தி இயக்கத்தோடு தொடர்புடையதாக இருப்பதால் ஒருபோதும் பௌதிகமானதாக கருதக்கூடாது. நிர்வாக சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் ஒருவர் கிருஷ்ண உணர்வில் இல்லை என்று அர்த்தமல்ல. ஒருவர் தினமும் 16 சுற்றுகள் மஹாமந்திரத்தை ஜபித்து கட்டுப்பாட்டு விதிமுறைகளை கடைபிடித்தால் அவர் கிருஷ்ண பக்தி இயக்கத்தை பரப்புவதற்காக இப்பௌதிக உலகத்தை கையாளுவது நமது கிருஷ்ண பக்தியை சாகுபடி (வளர்ப்பதில் இருந்து) வேறுபட்டதல்ல.

விதிகளை பிரகடனம் செய்தல் மற்றும் செய்லபடுத்துவதன் மூலம் மட்டுமே ஒரு ஆன்மீக சமுதாயத்தில் உள்ள நிர்வாகி தனது நிர்வாக கடமைகளை பூர்த்தி செய்ய இயலாது. அவ்விதிகள் ஆன்மீக தளத்தை கொண்டிருப்பதோடு மட்டுமின்றி அதை அமல்படுத்தி செயல்படுத்துவதும் வைஷ்ணவ கோட்பாடுகளை தழுவியே அமைய வேண்டும். இவ்வாறு புரிந்து கொண்டு சேவை செய்யும் நிர்வாகிகள் பொதுவாக தனது அதிகாரத்திற்கு கீழ் இருப்பவர்களின் மொத்த ஆன்மீக பொறுப்புகளை சுமப்பவாரக இருக்கிறார்.

எனவே, நாம் ஆன்மீக மற்றும் நிர்வாகத்திற்கு இடையே உள்ள ஒற்றுமையை காண வேண்டும். அதே சமயத்தில் சில வேற்றுமை இருப்பதை வேறுபாடுகளும் இருக்கின்றது. ஒரே சமயத்தில் ஒற்றுமை மற்றும் வேற்றுமை இருப்பதை புரிந்து கொள்ள இந்த இரண்டு தனிப்பட்ட வார்த்தைகளை அதன் விளக்கங்களோடு உபயோகித்தல் அவசியம்.

**ஆன்மீக அதிகார அமைப்பு**

இந்த ஆன்மீக அதிகார அமைப்பு பகவான் கிருஷ்ணரிடம் துவங்கி பிரம்மா, நாரதர், வியாசர் மற்றும் மொத்த குரு சீட பரம்பரையில் நமது ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதர் வரை தொடர்கிறது. நமது சம்பிரதாயத்திற்கு கீழ்படிந்து மொத்த ஜி.பி.சி.யின் அதிகாரத்திற்கு கீழ் சேவை செய்வோர் இந்த வெற்றிச் சின்னமான இஸ்கான் என்னும் ஆன்மீக அமைப்பில் நிர்வாக குழும ஆணையர்கள், வட்டார செயலாளர்கள், ஆன்மீக குருமார்கள், சந்நியாசிகள், மண்டல செயலாளர்கள், கோவில் தலைவர்கள், மன்றத் தலைவர்கள் மற்றும் சுற்றுப்பயண சமூக பிரச்சாரகர்கள் அனைவரும்த அடக்கம். சொல்லவேண்டுமெனில், எவரெல்லாம் ஒரு அங்கீகாரம் பெற்ற ஆன்மீக குருவை அவரது உதாரணத்தின் மூலமாகவோ அல்லது அவரை அறிந்து கராராக .(சிரத்தையுடன்) பின்பற்றுகிறார்களோ அவர்கள் இந்த ஆன்மீக அதிகார அமைப்பை பிரதிநிதிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டவர்கள்.

பொதுவாக கூறினால், ஒருவருடைய தீக்ஷா அல்லது சிக்ஷா குருவே மிக பிரதானமாக ஆன்மீக அதிகாரி. பக்தர்கள் தங்களின் ஆன்மீக குருவிடம் கீழ்படிந்தும், வாஞ்சையுடனும் செயல்பட வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்விதமாக ஆன்மீக குருமார்கள் தங்களது சீடர்கள் மீது அதிகாரம் செலுத்தி, அவர்கள் பக்தியில் வளர்ச்சி பெறுவதற்கு கற்பித்து பயிற்சி அளிக்கிறார்கள், இவ்விதமாக ஆன்மீக குருமார்கள் அவர்களது சிஷ்யர்கள் ஆன்மீக வாழ்வில் முன்னேற்றமடைய தேவையான ஆன்மீக கல்வி மற்றும் உற்சாகத்தை கொடுப்பதில் முக்கியமான பங்கினை ஏற்றுக் கொள்கிறார்கள்.

**நிர்வாக அதிகார அமைப்பு**

ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளைகயின் படியும் மொத்த ஜி.பி.சியிலிருந்தும் இயக்கத்தின் மேற்பார்வை மற்றும் விதிமுறைகள் அமலாக்கம் ஆகியவை தொடர்கிறது. நாம் நிர்வாக அமைப்பில் அதிகாரி என்ற வார்த்தையை உபயோகிக்கும் போது முழுமையான நிலை இழக்காத சாஸ்திரங்களைப் போன்ற அதிகாரியை குறிப்பிடவில்லை. ஆனால், ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளைகளுக்கு இணங்கி இந்த பிரச்சார இயக்கத்தினை ஒருங்கிணைக்கும் கட்டளையை குறிப்பிடுகிறோம். ஸ்ரீல பிரபுபாதரால் கொடுக்கப்பட்ட அக்கட்டளையை செயல்படுத்த அவரை பின்பற்றுவோர் இஸ்கானின் இந்த நிர்வாக அமைப்பை ஏற்றுள்ளனர். இதன்மூலம் கோவில்கள், சத்சங்க பக்தர்கள் (வெளியில் தங்குபவர்கள்) மற்றும் பண்ணைகள், குரு குலங்கள் போன்ற திட்டங்கள் மேலும் இதர சாதகமான அமைப்பு மற்றும் நிறுவனங்களை அதிகரிப்பதற்காக செயல்படுகிறார்கள் இவ்வாறு விரிவடையும் போது இயக்கத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் சிறப்பாக சேவை செய்ய இந்த அமைப்பு இப்பொழுது பல்வேறு வட்டார, தேசிய, கண்டத்தின் நிர்வாக அமைப்புகளை உள்ளடக்கி உள்ளது. நிர்வாக அமைப்பு ஆணையர்கள் (GBC), மண்டல செயலாளர்கள், ஆன்மீக குருமார்கள், சந்தியாசிகள், தலைவர்கள் மற்றும் சுற்றுப்பயண பிரச்சாரகர்கள் மற்றும் பொதுஜன பிரச்சாரகர்களை கொண்டது.

**எங்கு வேறுபடுகிறது?**

ஒரு முன்மாதிரியான உலகில் எல்லாம் ஸ்ரீல பிரபுபாதர் இஸ்கானிற்காக கொண்ட நோக்கிற்கு இணங்க செயல்பட வேண்டுமென்றாலும் ஓர் அதிகார அமைப்பில் உள்ளவர் மற்ற அதிகார அமைப்பில் தலையிடும் போக்கினை நாம் பார்த்திருக்கின்றோம்.

உதாரணமாக, சில ஆன்மீக அதிகாரிகள் சிலசமயம் தகுதிவாய்ந்த மற்றும் பொறுப்புள்ள நிர்வாகிகளின் செயல்பாட்டில் குறுக்கிடுகிறார்கள். தாங்கள் பிரச்சாரம் செய்து தாக்கம் ஏற்படுத்தும் வட்டாரத்தில் உள்ள வட்டார நிர்வாக அமைப்பில் தாங்களும் ஒரு அங்கம் என்பதை (அவ்வமைப்பிற்கு அவர்கள் பதிலளிக்க வேண்டியவர்கள் என்றாலும்) கருதுவதில்லை. ஆனாலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர்கள் அந்த அமைப்பிற்குள் சில திட்டங்களை செயல்படுத்துகிறார்கள்.

ஆகையால் சில நேரங்களில் அவர்கள் பக்தர்கள், பணம் மற்றும் அவர்களைப் பின்பற்றுவோர் சார்ந்துள்ளோர் பொறுப்பிலிருக்கும் திட்டங்களையும் நிர்வகிக்கிறார்கள். ஆனால் எந்த நிர்வாக அமைப்பில் அவர்கள் குறுக்கிடுகிறார்களோ அதோடு அவர்கள் எந்த தெளிவான ஒப்பந்தமும் இல்லாமல் செயல்படுகிறார்கள். தங்களை சார்ந்துள்ளோரின் சேவை மற்றும் விசுவாசத்தை தங்களது ஆன்மீக அதிகார அமைப்பிலுள்ள நிர்வாக அமைப்பிற்கு திசைதிருப்புவதன் மூலம் அவர்களை அறியாமலேயே அவர்கள் நிர்வாக அமைப்பினை பலமிழக்கச் செய்யலாம்.

இச்சூழ்நிலை குழப்பத்தை ஏற்படுத்துவதோடு பிரிவுணர்வயையும் ஏற்படுத்துகிறது. இதுமாதிரியான சூழ்நிலைகள் நிர்வாகிகளின் விவாதத்திற்கு உரியதாகலாம். ஆனாலும் பெரும்பாலும் மிக இளநிலை நிர்வாகிகள் தங்களின் புகார்களை நேரடியாக எழுப்புவதை அபராதம் செய்துவிடுவோமோ என்ற பயத்தில், குறிப்பாக ஆன்மீக குருவிடம், தவிர்ப்பார்கள்.

மற்றொரு கையில் சிலசமயம் சில நிர்வாக அதிகார அமைப்பினரும் போதிய ஆன்மீக பாதுகாப்பு அளிப்பதில்லை. இது ஆன்மீக குரு தனது சிஷ்யர்களுக்கு ஒரு மாற்று சங்கத்தை அல்லது சேவையை பரிந்துரைப்பதை தூண்டுகிறது.

உதாரணத்திற்கு நிர்வாகிகள் சிலசமயம் தனது பாதுகாப்பில் இருப்பவர்களின் தினசரி பயிற்சி, தூய்மையாக பிரச்சாரம் செய்தல் அல்லது தூய பக்தித்தொண்டை வளர்த்துக் கொள்ளுதல் போன்றவற்றை காட்டிலும் நிர்வாக குறிக்கோள்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். தங்களது நிர்வாக எல்லையில் இருப்போர் தங்களின் நிர்வாக பார்வையில் ஒரு திறனற்றவர்களாக இருப்பாராயின் அவர்களது ஆன்மீக முன்னேற்றத்தை நிராகரிக்கலாம். ஆனால் இந்நிர்வாகிகளே அவர்களிடம் சேவையை பெற அவர்களை ஏதாவது சிறிய அளவில் உற்சாகப்படுத்தி இருக்கலாம். அல்லது மற்ற அதிகாரிகள் அவ்விதம் செய்ய அதிகாரம் அளித்திருக்கலாம்.

**நிர்வாக அமைப்பிற்கு மரியாதை**

மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகள் ஆன்மீக மற்றும் நிர்வாக அமைப்பிற்கு இடையே பதற்றத்தை ஏற்படுத்தும்.

சிலசமயங்களில்  சில சூழ்நிலைகள் ஏற்படும். அதாவது சில பொருளாதார ரீதியாக சுதந்திரமான பக்தர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ள சங்க நிர்வாகத்தோடு எந்த நிர்வாகத் தொடர்பும் இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் அதற்காக ஓரிடத்தில் உள்ள நிர்வாக அமைப்பு அவர்கள் மீது நிர்வாகத்தின் கீழ் உள்ள பக்தர்களை பராமரிக்கும் அமைப்பில் ஒவ்வொரு பக்தரையும் அல்லது பக்தராக விரும்புகின்றவர்களையும் சேர்ப்பதற்கு எந்தவித முயற்சியும் அவ்விடத்திலுள்ள நிர்வாகத்தால் எடுக்கப்படவில்லை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது.

ஆகையால், இஸ்கானின் நிர்வாகிகள் செய்யும் சேவையை மதிக்கும் பொருட்டு, ஆன்மீக குரு அவர்களது சீடர்களுக்கு மாற்று சங்கத்தை அல்லது சேவையை பரிந்துரைப்பதற்கு முன் அல்லது  நிர்வாக முடிவுளில் தலையிடுவதற்கு முன் தனது சீடர்கள் வாழும் இடத்திலுள்ள நிர்வாகியிடம் எப்பொழுதும் அனுமதி பெற வேண்டும்.

மிகச் சிறந்தது என்னவென்றால் ஆன்மீக குரு சிஷ்ய உறவு ஏற்பட்டதில் இருந்தே குருவானவர் சிஷ்யர்களை அவர்கள் இருக்கும் இடத்தின் நிர்வாகிகளுக்கு மரியாதை செலுத்த பயிற்சி அளிப்பது. பல இஸ்கான் நிர்வாகிகள் கோவில் விக்ரஹங்கள், புத்தக விநியோகம் மற்றும் ஸ்ரீல பிரபுபாதரால் நமக்கு கொடுக்கப்பட்ட தரத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை மேற்கொள்கிறார்கள்.

விக்ரஹ பிரதிஷ்டை என்றால் முறையான வழிபாடு, தவறாமல் செய்தல்.

ஆகையால் ஆன்மீக குருமார்கள் தங்ளது சீடர்களுக்கு அவர்கள் இடத்திலுள்ள நிர்வாகிகள் மற்றும் தலைவர்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பதன் மூலம் ஸ்ரீல பிரபுபாதரின் இயக்கத்திற்கு சேவைசெய்ய கற்றக் கொடுக்க வேண்டும்.

அதற்காக தங்களது பராமரிப்பில் உள்ளவர்களின் முறையான தேவைகளை நிராகரிக்கும் முழு சுதந்திரத்தை அனுமானித்துக் கொள்ளக்கூடாது. அல்லது ஆன்மீக குரு தனது சிஷ்யர்கள் வெளிப்படுத்தும் கவலைகளை அதாவது முறையாக சிஷ்யர்கள் பராமரிக்கப்படுவதை கேட்பதை உதாசீனப்படுத்தும் சுதந்திரத்தை அனுமாதித்துக் கொள்ளக் கூடாது. ஆன்மீக குருக்கள் மற்றும் அவர்களது சிஷ்யர்களின் கவலைகளை உணரக்கூடியவராக நிர்வாகிகள் இருக்க வேண்டும்.

தனது சிஷ்யர்களிடம் பெறப்பட்ட பொறுப்பு மற்றும் வாக்கின் அளவிற்கு ஏற்ப அந்த நிர்வாகிகளால் அவர்கள் பராமரிக்கப்படவில்லை என ஒரு ஆன்மீக குரு இன்னும் கருதுவார் எனில் அவர்தனது சிஷ்யர்களின் சார்பில் உயர்மட்ட நிர்வாகிகளான ஜி.பி.சி. உறுப்பினர்கள் அல்லது இந்த வெயீட்டின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற இஸ்கான் முறையீட்டு வழிமுறைகளில் முறையிடலாம்.

பின்னர் இவ்விஷயத்தை பற்றி அதிகம் இடம்பெறும். ஆனால் அதை செய்வதற்கு முன் நாம் முதலில் சுருக்கமாக நம்பிக்கை பற்றி விவாதிப்போம். இரண்டு நிர்வாக அமைப்புகளும் இங்கே விவாதிக்கப்படும் பிரச்சனைகளில் நம்பிக்கையின் தொடர்பை கருத்தில் கொள்ள தேவையான எல்லா கருத்துக்களும் கொடுக்கப்படும்.

அதிகாரம் என்பது தொடர்ந்து வளரும் நம்பிக்கையில் அமைகிறது.

தனது அங்கத்தினரின் நம்பிக்கையே இஸ்கானின் மிகப்பெரிய சொத்தாகும். கோவில் எதுவும் இல்லை என்றாலும் எந்த வருமானமும் இல்லை என்றாலும் எந்த திட்டமும் இல்லை என்றாலும் மற்றும் பின்பற்றுபவர்கள் குறைவாக இருந்தாலும் நம்பிக்கை இருக்குமாயின் செழுமை இருக்கும். ஸ்ரீல பிரபுபாதர் பின்வரும் கடித்தில் சொல்வதை கருத்தில் கொள்ளவும்.

சமஸ்கிருதத்தில் ஒரு பழமொழி உள்ளது உற்சாகமுள்ளவர் அதிர்ஷ்ட தேவதையின் ஆதரவை பெறுவர். மேற்கத்திய நாடுகளில் இந்த முழக்கத்திற்கான தெளிவாக தெரியக்கூடிய உதாரணம் உள்ளது. இப்பகுதி மக்கள் பொருளாதார முன்னேற்றத்தில் அதிக உற்சாகமாக இருக்கிறார்கள், அதை அடையவும் செய்கிறார்கள். அதைப்போல ஸ்ரீல ரூபகோஸ்வாமியின் கட்டளைப்படி நாம் ஆன்மீக விஷயங்களில் உற்சாகம் அடைந்தால் நாமும் வெற்றி பெறுவோம். உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், நான் எனது முதிர்ந்த் வயதில் உங்கள் நாட்டிற்கு வந்தேன். ஆனால் என்னிடத்தில் ஒரு சொத்து இருந்தது, உற்சாகம் மற்றும் எனது  ஆன்மீக குருவின் மீதான நம்பிக்கை. இந்த சொத்துக்கள் மட்டுமே எனக்கு சில நம்பிக்கை ஒளியை தருகின்றன. உங்களது ஒத்துழைப்புடன் நான் இதுவரை செய்துள்ள சாதனையும் அதன் மூலமே அடைந்தேன்.

பகவத் கீதை உண்மையுருவில்(9:3) ல் கிருஷ்ண உணர்வில் ஒருவர் முன்னேறுவதற்கு நம்பிக்கை மிக முக்கிய காரணமாகும். நம்பிக்கையின் மூலமே ஒருவர் கிருஷ்ண பக்தியில் முன்னேற முடியும்.

தங்களைப் பின்பற்றுபவர்களிடத்தில் தூய பக்திசேவை, நமது சம்பிரதாயம், ஸ்ரீல பிரபுபாதர் மற்றும் இஸ்கான் மற்றும் அதன் நிர்வாகம் ஆகியவற்றின் மீதான நம்பிக்கை வளரும்

விதத்திலும் பாதுகாக்கப்படும் விதத்திலும் ஆன்மீக நிர்வாக அமைப்பினர் பிரச்சாரம் செய்யவும் நடந்து கொள்ளவும் வேண்டும்.

இஸ்கான் நிர்வாகிகளுக்கு தாங்கள் ஆன்மீக அதிகார அமைப்பின் பொருத்தமான பிரதிநிதி என்ற நம்பிக்கையை வளர்ச்சி அடையச் செய்யும் பொறுப்பும் ஆன்மீக குழுக்களுக்கு இருக்கின்றது. அதற்கு மாறாக அவர்கள் நடந்து கொண்டால் மற்றவர்களில் நம்பிக்கையை அரித்து விடுவார்கள்.

நேர்மாறாக, நிர்வாக அதிகார அமைப்பினர் ஆன்மீக அதிகார அமைப்பினர் மற்றும் அவரது சிஷ்யர்களின் நம்பிக்கை நீடிக்கும் மற்றும் வளரும் விதத்திலும் நடந்து கொள்ளவும் பிரச்சாரம் செய்யவும் வேண்டும். நிர்வாகிகள் தங்களின் பராமரிப்பில் இருப்பவர்களிடம் உண்மையான அக்கறை காட்டுவதின் மூலம் ஆன்மீக குழுக்கள் இயற்கையாகவே தங்களின் சிஷ்யர்கள அந்த நிர்வாகியின் சேவையில் உதவியாக இருக்க ஊக்கப்படுத்துவார்கள். ஆனால் நிர்வாகிகள் ஆன்மீக கோட்பாட்டிற்கு எதிராக, தங்களின் பொறுப்பில் உள்ள பக்தர்களின் ஆன்மீக நலன்களுக்கு முரணாக நடந்து கொண்டால் அதுவும் மற்றவர்களின் நம்பிக்கையை அரித்துவிடும்.

ஆகையால் இஸ்கான் அங்கத்தினரின் நம்பிக்கைக்கு பாதுகாப்பு கொடுக்க இரண்டு அதிகார அமைப்பினருக்கும் நாம் தெளிவான கொள்கைகளை அரித்துரைப்பது அவசியமாகிறது.

ஆன்மீக குருமார்கள் சுதந்திரமானவர்கள் அல்ல.

தெளிவான கொள்கைகளை அறிமுகப்படுத்துவதின் அவசியத்தை மேலும் தெளிவுபடுத்த நாம் இஸ்கானின் நிர்வாக அமைப்பினுள் ஆன்மீக குருமார்களின் ஸ்தானத்தைப் பற்றி ஆராய்வோம்.

ஸ்ரீல பிரபுபாதர் இவ்வுலகில் இருந்த பொழுது அவரே இஸ்கானின் ஒரே தீக்ஷா குரு, ஒப்புயர்வற்ற சிக்ஷா குரு மற்றும் ஜி.பி.சி. யை விட உயர்ந்த நிர்வாக அதிகாரி

நாம் நமது கிருஷ்ண பக்தி இயக்கத்தை நிர்வாக ஆணையக் குழுவின் (ஜி.பி.சி) மூலம் நிர்வாகம் செய்கிறோம், மொத்த உலக விவகாரங்களையும் 20 ஆணையக் குழு உறுப்பினர் மேற்பார்வையிடுகின்றனர். ஜி.பி.சி.க்கு மேற்பட்டு நான் இருக்கின்றேன். ஜி.பி.சி.யின் கீழ் கோவில் தலைவர்கள், செயலாளர், பொருளாலர் என ஒவ்வொரு மையத்திலும் இருக்கின்றனர். கோவில் தலைவர்கள் ஜி.பி.சியிடம்மை பொறுப்பாகவும், ஜி.பி.சி என்னிடத்தில் பொறுப்பாகவும் இருக்கின்றனர். இவ்வாறு, நாம் நிர்வாகம் செய்கின்றோம்.

ஸ்ரீல பிரபுபாதர் உடல்ரீதியாக இல்லாத பொழுது இந்த அமைப்பு சற்றே வித்தியாசமாக உள்ளது. ஸ்ரீல பிரபுபாதர் ஜி.பி.சியே இஸ்கானின் இறுதியான நிர்வாக ஆணையம் என கட்டளை இட்டிருக்கிறார். அதே சமயத்தில் அவர் இச்சமுதாயத்தில் பல ஆன்மீக குழுக்கள் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியின் வழிகாட்டுதலின் கீழ் யாரெல்லாம் பகவான் சைதன்யரின் போதனைகளை பின்பற்றுகிறார்களோ அவர்களள் ஆன்மீக குரு ஆகலாம்.

மேலும் நான் இல்லாத போது எனது சிஷ்யர்கள் அனைவரும் கிருஷ்ண உணர்வை உலகம் முழுவதும் பரப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவாக வேண்டும்.

இது ஒரு சவாலான சூழ்நிலைக்கு வழி வகுக்கிறது. பல ஆன்மீக நிறுவனங்களில் ஒரே ஆன்மீக குரு இருப்பார், அவரே ஒட்டு மொத்த தலைவராக செயல்படுவார். ஆனால் இஸ்கானில் பல ஆன்மீக குருமார்கள் இருக்கிறார்கள். அதோடு சேர்த்து ஆணையக்குழு (ஜி.பி.சி.) மொத்த இயக்கத்திற்கும் இறுதியான நிர்வாக ஆணையமாக செயல்படுகிறது. இஸ்கானில் ஆன்மீக குருவாக செயல்படுபவர்கள் ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளைகளுக்கு பணிந்து நடக்க வேண்டும். மேலும் மொத்த ஜி.பி.சியின் கீழ் செயல்பட வேண்டும்.

இவ்வாறு ஆன்மீக குருமார்கள் இச்சமூகத்தின் கொள்கைகள் மற்றும் ஒழுக்க விதிகளை பின்பற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்வெளியீட்டில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் உட்படவும் மற்றும் நிர்வாகத்தின் முடிவுகளுக்கு உட்பட்டும் நடக்க வேண்டும்.

உள்ளூர் நிர்வாக அமைப்பிற்கு சற்றும் சம்பந்தமில்லாத சங்கம் மற்றும் தனது சங்கம் என்று மட்டும் தனது சிஷ்யர்கள் சங்கம் எடுத்துக் கொள்வதைக் காட்டிலும் ஏற்கனவே உள்ளூரில் இஸ்கானின் நிர்வாக மற்றும் பக்தர் நல சங்கத்தில் சங்கம் எடுத்துக் கொள்ளவும் சேவை செய்யவும் தனது சிஷ்யர்களை ஊக்கப்படுத்தும் பொறுப்பும் இதில் அடங்கும்.

**சிஷ்யர்கள் தங்களின் அதிகாரிகளுக்கு இடையே முரண்பாடு ஏற்படுத்துவதை தவிர்க்க வேண்டும்**

சிஷ்யர்களும் இஸ்கானின் அமைப்பை புரிந்துகொள்ள வேண்டும். நிச்சயமாக ஓர் ஆன்மீக குரு ஒரு ஜி.பி.சி. அங்கத்தினரை விடவோ எந்த ஒரு இஸ்கான் நிர்வாகியை விடவோ ஆன்மீகத்தில் முன்னேறியவராக இருக்கலாம். (சில சமயங்களில் உள்ளூர் ஜி.பி.சி. அல்லது வேறெதாவது இஸ்கான் நிர்வாகி ஒரு குறிப்பிட்ட ஆன்மீக குருவை காட்டிலும் ஆன்மீகத்தில் முன்னேறியவராக இருக்கலாம்.)

எனினும் நாம் ஏற்கனவே தெளிவாக காட்டியதைப் போல சமூகத்தின் ஆன்மீக நிர்வாகத்தை ஸ்ரீல பிரபுபாதர் மொத்த ஜி.பி.சி. அதன் அங்கத்தினர்கள் மற்றும் இஸ்கானின் மற்ற நிர்வாகிகளிடத்தில் ஒப்படைத்துள்ளார்.

தனது குரு மொத்த ஜி.பி.சி. மற்றும் இஸ்கானின் சட்டங்கள் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டவர் என்ற தவறான நம்பிக்கை கொண்டிருந்தால் அது அந்த ஆன்மீக குரு அல்லது மற்ற அதிகாரிகளால் திருத்தப்பட வேண்டும். இல்லாவிடில் இந்த தவறான நம்பிக்கை அவருடைய ஆன்மீக மற்றும் நிர்வாக அதிகாரிகளிடையே முரண்பாட்டை ஏற்படுத்தலாம்.

எல்லா சிஷ்யர்களும் தங்களது இஸ்கான் அதிகாரிகளை பின்பற்ற வேண்டும். அதேபோல் எல்லா சிக்ஷா மற்றும் தீக்ஷா குருமார்கள் இஸ்கானிற்குள் தங்களது அதிகாரிகளைப் பின்பற்ற வேண்டும்.

தனது சிஷ்யர்களுக்கு தனது உதாரணத்தின் மூலம் போதனைகள் மற்றும் பக்தியை வளர்த்து கொள்வதில் கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல் இஸ்கானின்

நிர்வாக அமைப்பில் அவர்களது உறவு பற்றியும் (ஆன்மீக குருமார்களின்) அந்த அமைப்போடு தங்களில் (ஆன்மீக குருமார்களின்) உறவு பற்றிய கல்வியும் பயிற்சியும் அளிக்க வேண்டும்.

**அறிமுகப்படுத்தப்படும் கொள்கைகள்**

**குருமார்களின் சிஷ்யர்களுக்கான கல்வி**

இஸ்கானில் பின்வருவனவற்றை தங்களது சிஷ்யர்கள் ஒவ்வொருவரும் தெளிவாக புரிந்து கொள்ள உதவுவது ஆன்மீக குருமார்களின் பொறுப்பாகும்.

1. ஆன்மீக குரு தனது அதிகாரத்தை ஶ்ரீல பிரபுபாதரிடம் அவர் கொண்டுள்ள விசுவசாத்திலிருந்து பெறுகிறார். இதில் ஶ்ரீல பிரபுபாதரின் கட்டளையான தனது இயக்கமான இஸ்கானிற்குள் செயல்பட வேண்டும் என்பதன் மீதுள்ள விசுவாசமும் அடங்கும்.
2. ஆன்மீக குரு இஸ்கானின் ஒரு உறுப்பினர். மேலும், அவர் அதன் தலைமையான ஜி.பி.சி.யின் கூட்டு விருப்பத்திற்கு பொறுப்பாகிறார்.
3. தான் ஆன்மீக குருவாக இருப்பதால் எந்த ஆன்மீக குருவும் இஸ்கானின் வளங்கள் மீது தனி உரிமை கொள்ளக் கூடாது. மேலும் தனது சிஷ்யர்கள் மீதுள்ள உரிமையை தவறாக பயன்படுத்தக் கூடாது.
4. தீக்ஷா மற்றும் சிக்ஷா குருமார்கள் தங்களின் இஸ்கான்அதிகாரிகளை பின்பற்றி எவ்வாறு உதாரணம் காண்பிக்கின்றார்களோ அதேபோல் சிஷ்யர்களும் அவர்களது இஸ்கான் அதிகாரிகளை பின்பற்ற வேண்டும்.
5. சிஷ்யர்களுக்கு உள்ள அத்தியாவசிய பணி என்னவெனில் ஆன்மீக குருவின் மூலம் கிருஷ்ணரை சரணடைய வேண்டும். தங்களது ஆன்மீக முன்னேற்றத்தில் உதவிய இஸ்கான் நிர்வாகத்தினுள் இருக்கும் முதிர்ந்த பக்தர்களை அங்கீகரித்து மரியாதை செய்வதும் இதில் அடங்கும்.
6. ஆன்மீகத்தில் முதிர்ந்த நிர்வாகிகள் தங்களுடைய தீக்ஷா சிஷ்யர்கள் அல்லாதவர்களுக்கும் பிரதான சிக்ஷா குருவாக இருக்கலாம். மேலும் அப்படிப்பட்ட உறவை தீக்ஷா குருமார்களால் முழுமையாக ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**குருமார்களின் நடத்தை**

மேலும் நிர்வாக அதிகார அமைப்பினருக்கு மரியாதை செலுத்த மற்றும் ஆன்மீக அதிகார அமைப்பின் மீது நிர்வாகிகளுக்கு இருக்கும் நம்பிக்கையை பாதுகாக்கவும் வளர்க்கவும் ஒவ்வொரு ஆன்மீக குருவும் பின்வருவனவற்றை கடைபிடிக்க வேண்டும்.

1. ஒரு அங்கீகரிக்கப்பட்ட இஸ்கான் மையத்திற்கோ அல்லது பிரச்சார மையத்திற்கோ விஜயம் செய்யும் பொழுது அந்த உள்ளூர் நிர்வாகியிடம் தன்னுடைய விஜயத்தின் போது எவ்வாறு தான் (ஆன்மீக குரு) அந்த மையத்திற்கு, சேவை செய்யலாம் என கேட்கலாம். (தன்னுடைய சொந்த செயல்பாட்டியலை மட்டும் அடைய முயற்சிக்காமல்)

2. ஒரு கோவில் இல்லாத ஒரு மண்டலம் அல்லது பிராந்நிதயத்திற்கு விஜயம் செய்ய திட்டமிடும் முன் அந்த மண்டல ஜி.பி.சி.யிடம் அவ்விடத்திற்கு உள்ளூர் தலைவர்கள் ஏதேனும் திட்டம் வைத்துள்ளார்களா? அதற்கு தான் (ஆன்மீக குரு) எவ்வாறு சேவை செய்யலாம் என்று கேட்க வேண்டும்.
3. நிர்வாக முடிவுகளில் ஏதேனும் கருத்து வேறுபாடு இருந்தால் தன்னால் இயன்ற அளவு சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் ஒத்துழைக்க வேண்டும். எந்த உடன்பாடும் ஏற்படவில்லை என்றால் அந்த ஆன்மீக குரு தேவைப்பட்டால் மேல் அதிகாரிகளிடம் முறையிடும் விருப்பத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முடிவுகளை ஒத்தி வைக்க வேண்டும்.

**நிர்வாகிகளின் கடமைகள்**

இஸ்கானிற்குள் ஒத்துழைப்பு ஏற்படவும் ஆன்மீக அதிகார அமைப்பினருக்கு மரியாதை செலுத்தவும் மேலும் ஆன்மீக குருமார்கள் மற்றும் அவர்களது சிஷ்யர்களின் நம்பிக்கை நிர்வாக அதிகார அமைப்பின் மீது வளர்வதற்கும் பாதுகாப்பதற்கும் நிர்வாகிகள் பின்வருவனவற்றை கடைபிடிக்க வேண்டும்.

1. தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிக்கு விஜயம் செய்யவும் தீக்ஷா குருமார்கள் மற்றும் இதர சுற்றுப்பயண பிரச்சாரகர்களின் அறிவுரைகளை குறிப்பாக பக்தர் பராமரிப்பில் கூறப்படும் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளுங்கள்.
2. அவர்ளை சார்ந்திருப்பவர்கள் தூய பக்தி மீதும், தீக்ஷா மற்றும் சிக்ஷா குருவை ஏற்று அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்னும் கொள்கையின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும்.
3. பக்த பராமரிப்பு முறையை தங்களது நிர்வாகத் துறையினுள் ஊக்குவித்து ஆதரிக்க வேண்டும். (உ.ம். ஆலோசகர் முறை, பிராமணர் அறிவுரை குழு முதலானவை).
4. பக்த பராமரிப்பு கொள்கைகளில் தங்களுடைய அதிகார அமைப்பில் உள்ள நிர்வாகிகள் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் என்பதை உறுதிபடுத்த வேண்டும்.
5. விஜயம் செய்யும் ஆன்மீக குருமார்களிடம் அவர்களது சிஷ்யர்களின் ஆன்மீக நலம் மற்றும் நல்வாழ்வு பற்றி தெரிவிக்க வேண்டும்.
6. யாருக்கு தேவைப்படுகிறதோ யார் அவருடைய உதவியை ஏற்கும் தன்மை கொண்டுள்ளார்களோ அப்படிப்பட்ட சிஷ்யர்களை ஆன்மீக குருமார்களோ அல்லது சுற்றுப் பயண பிரச்சாரகர்களோ சென்று அடைவதற்கு ஊக்குவித்து உதவ வேண்டும்.
7. ஒரு நியாயமான தீக்ஷா பரிந்துரைக்கும் முறை இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அது உள்ளூர் நிர்வாகிகளின் தேவையற்ற அழுத்தம் அல்லது கையாளுதலை மன்னிக்காத ஒன்றாக இருக்க வேண்டும்.

**சுருக்கம்**

பக்தர்களின் ஆன்மீக வாழ்க்கை முழுமையாக மலர்ச்சியடைவதை ஊக்கப்படுத்த ஸ்ரீல பிரபுபாதர் இஸ்கானிற்கு ஒரு தெளிவான அதிகார அமைப்பு கொண்ட நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறார். ஒவ்வொரு இஸ்கான் அங்கத்தினரும் இந்த அமைப்பை மதித்து அதனுள் சேவை செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். நிர்வாக அமைப்பின குறிக்கோள் ஆன்மீகமானது:- இஸ்கானின் உறுப்பினர்களுக்கு பக்தர்களின் சங்கம், சேவை செய்ய

வாய்ப்பு மற்றும் பிரச்சார உத்திகள் மூலம் இஸ்கானின் அங்கத்தினர் ஆன்மீக முன்னேற்றம் பெற வசதி செய்து தருதல். அதே நேரத்தில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட குழுவிடமிருந்து தீக்ஷா பெறுவதின் அடிப்படை முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறது.

நமது ஸ்தாபக ஆச்சாரியர் ஸ்ரீல பிரபுபாதர் பல இஸ்கான் பக்தர்களின் தீக்ஷா குரு மற்றும் எல்லா இஸ்கான் பக்தர்களுக்கு இப்பொழுதும் எப்பொழுதும் முதன்மை சிக்ஷா குரு என்பது மிகவுயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும் முக்கியமானது என்னவென்றால் பல சிக்ஷா மற்றும் தீக்ஷா குருமார்கள் இஸ்கானில் இப்பொழுது சேவை செய்கிறார்கள்.

எல்லா ஆன்மீக குருமார்களும் அவர்களின் சிஷ்யர்களும் நிறைய நிர்வாகிகளுக்கு நமது சமுதாயத்தில் இருப்பதின் முக்கியத்துவத்தை பாராட்ட வேண்டும். ஏனென்றால் அவர்கள் பக்தர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக இஸ்கான் வழங்கு வசதிகளை மேற்பார்வை இடுகிறார்கள். மேலும், சிஷ்யர்களுக்கு உதவி, பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் செய்கிறார்கள். தங்களுடைய நன்மைக்காகவும் சமுதாயத்தின் வளத்திற்கு உதவுதற்கும் எல்லா ஆன்மீக குருமார்கள் மற்றும் அவர்களது சிஷ்யர்களுக்கும் இஸ்கானின் நிர்வாக அமைப்போடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இந்த ஒருங்கிணைந்த பரஸ்பர மரியாதை உணர்வே சமுதாயத்தின் ஒற்றுமையை பாதுகாக்கவும், ஸ்ரீல பிரபுபாதரை திருப்திபடுத்தவும் சங்கீர்த்தன இயக்கத்தை விரிவடையச் செய்யவும் மிகச்சிறந்த வழியாகும்.

பகவான் சைதன்யரின் மனநிலையில் ஸ்ரீல பிரபுபாதர் எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் இந்த சங்கீர்த்தன இயக்கம் பரவ வேண்டும் என்று விருப்பப்பட்டார். அந்த ஆசையை அவர் தொடர்ச்சியாக பிரயாணம் செய்வது, எழுதுவது மற்றும் பேசுவது மூலம் நிரூபித்தார். எல்லா இடங்களிலும் மையங்கள் திறக்குமாறும், புத்தகங்கள் விநியோகிக்குமாறும்  தன்னுடைய சிஷ்யர்களிடம் அவர் கோரினார். இஸ்கான் தொடர்ச்சியாக விரிவடைய வேண்டும், பகவான் சைதன்யரின் கருணையை வழங்கும் நிலைவ போன்று உதயமாக வேண்டும் என்பது ஸ்ரீல பிரபுபாதரின் விருப்பம்.

இந்நோக்கத்திற்காகவே ஸ்ரீல பிரபுபாதர் இஸ்கானை ஒரு நிர்வாக அமைப்பினை கொண்ட ஆன்மீக இயக்கமாக ஸ்தாபித்தார். இந்த அமைப்பின் நோக்கம் அவர் ஸ்தாபகம் செய்த தரத்தை பராமரிப்பதும், பக்தர்களுக்கு அடைக்கலம் மற்றும் ஆன்மீக ஊட்டமளிப்பது மற்றும் சங்கீர்த்தன இயக்கத்தை பெருக்குவதற்கு ஆதரவு தருவது போன்றவையாகும். கட்டுண்ட ஆத்மாக்களுக்கு ஸ்ரீ ஸ்ரீ கௌர நித்தாய் அவர்களது கருணையை வழங்கி ஸ்ரீல பிரபுபாதரை திருப்திபடுத்த இஸ்கானிலுள்ள அனைவரும் அதாவது ஆன்மீக குருமார்கள், சிஷ்யர்கள் மற்றும் நிர்வாகிகளும் ஒன்றாக இந்த அமைப்பிற்குள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.